தமிழ்நாடு
# நுகர்விழி
மாத இதழ்
நுகர்வோரின் மூன்றாவது கண்!
www.tncpo.com
10/- மலர் - 15 இதழ் - 4 ஏப்ரல் - 2021
TAMILNADU NUGARVIZHI
facebook TNCPO Chennai




## நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்...!
ஒரு சிறப்புப் பார்வை

## வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம்




PUBLISHED BY: TAMILNADU CONSUMER PROTECTION ORGANISATION CHENNAI



**Dr. D.C.ஜான்இளங்கோ**
மாநிலத் தலைவர் மற்றும்
காஞ்சிபுரம் மாவட்டத் தலைவர்
81227 35037



**K.தாந்தோணி**
மாநில இணைச் செயலாளர்
தமிழ்நாடு
99625 26601



**L.மயில்வாகனம்**
மாநில அமைப்புச் செயலாளர்
96001 29030



**D.விஜய்**
மாநில துணைத் தலைவர்
திருவொற்றியூர் மண்டல தலைவர்
99404 77815



**M.R.ஆனந்தன்**
மாநில துணைச் செயலாளர்
98846 68673



**G.அருணகிரி**
தலைவர், சமூக வலைதள அணி
98410 50681



**சிந்து R.சுப்பிரமணியம்**
மாநில துணைப்பொதுச் செயலாளர்,
திருப்பூர் மாவட்டத் தலைவர்
98431 88657



**K.தனசேகர்**
மாநில துணை பொதுச் செயலாளர்
98410 91317



**M.ரவி**
மாநில நிர்வாகக் கமிட்டி ஆலோசகர்
92827 47175



**A. விவேக்**
மாநில இயக்குனர்,
தரக்கட்டுப்பாடு குழு
97899 66012



**J.செல்வம்**
மாநில அமைப்பாளர்
82200 82727



**M.பாலாஜி**
மாநில நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்
96001 11522



**M.சுரேஷ்குமார்**
மாநில இணை ஒருங்கிணைப்பாளர்
96772 79744



**M.பிரபாகர்**
மாநில துணைச் செயலாளர்
94443 31396



**V.பாலாஜி**
மாநில உதவிச் செயலாளர்
89251 37737



**S. ஜெகன்பாபு**
மாநில உதவிச் செயலாளர்,
திருவல்லிக்கேணி பகுதி தலைவர்
98842 37456

## பேரமைப்பின் மாநில நிர்வாகிகள்

ADVT

தமிழ்நாடு
# நுகர்விழி
நுகர்வோரின் மூன்றாவது கண்!
மாத இதழ்

## வாசகர் கவனத்திற்கு

தமிழ்நாடு நுகர்விழி வாசகர்கள் தொடர்ந்து அளித்துவரும் ஆதரவை வரவேற்று தங்களை பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

மேலும் தங்களின் கருத்துக்கள், கட்டுரைகள், வினாக்கள், விமர்சனங்கள், தங்கள் பகுதியில் பொது மக்களுக்கு செய்த உதவிகள் போன்றவற்றை எங்க ளுடைய தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள் கிறேன். நாங்கள் அதை இப்புத்தகத்தில் பிரசுரிக்கிறோம்.

நன்றி, வணக்கம்.

### அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

ஆசிரியர்
**தமிழ்நாடு நுகர்விழி**
எண்.359 G, கொன்னூர் நெடுஞ்சாலை
பில்கிங்டன் சாலை சந்திப்பு (சயானி தியேட்டர் பஸ் நிலையம் அருகில்)
அயன்புரம்,
சென்னை – 600 023.
தொலைபேசி எண்: 044–43324844
கைபேசி எண்: 9444909993

இதழில் வெளிவரும் விளம்பரங்கள் நம்பகத் தன்மைக்கு "தமிழ்நாடு நுகர்விழி" பொறுப்பல்ல. நேர்காணல் மற்றும் சிறப்பு கட்டுரையாளரின் கருத் துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துகளே. பிரஸ் அண்டு ரெஜிஸ்ட்ரேஷன் ஆஃப் புக்ஸ் ஆக்டின்படி செய்திகளின் தேர்வுக்கு செய்தி நிர்வாக ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

## உள்ளே...

பப்ளிக் லயபிலிட்டி பாலிசி 5
FIR முதல் தகவல் அறிக்கை என்றால் என்ன...? 6
இந்து வாரிசுரிமைச் சட்டம்...! 12
இந்திய நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்...! 21

# நல்லாட்சி அமைய உறுதிகொள்வோம்!

தமிழகத்தில் கடந்த சில மாதங்களாகவே அரசியல் கட்சிகள் தேர்தலை எதிர்நோக்கி காத்திருந்த வேலையில் வரும் 06.04.2021 அன்று ஒரு வேளையாக மத்திய தேர்தல் ஆணையம் தேர்தலை ஒரே கட்டமாக நடத்திடவும், ஒரு மாதம் கழித்து பிறகு அந்த வாக்குகள் எண்ணிக்கையை தொடங்கிடவும், அதே நாளில் அறிவித்திடவும் முடிவெடுத்துள்ளது.

தமிழகத்தைப் பொறுத்தவரை 5 முனை போட்டியாக இந்தத் தேர்தல் உருவெடுத்தாலும் இரண்டு பெரிய கட்சிகளுக்குமிடையே நடைபெறும் ஒரு மகா யுத்தமாகத்தான் பார்க்க முடியும்.

தேர்தல் ஆணையம் கடுமையான பல நடவடிக்கைகள் எடுத்தாலும்கூட கட்சிகள் தங்களது வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்ய ஜனநாயகத்தை அழித்து பணநாயகத்தை பயன்படுத்த தயங்குவதில்லை. எங்கள் வாக்கு விற்பனைக்கு அல்ல என்று மக்கள் கூறினாலும், 100 சதவீத மக்கள் வாக்களிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினாலும், இந்திய சரித்திரத்தில் 70 அல்லது 80 சதவீதத்திற்கு மேல் வாக்குகள் பதிவாகுவதில்லை!

இந்நிலையில், பலமுனைப் போட்டிகளுக்கு மத்தியில் பாமர மக்களை பணத்திற்கு அடிமையாக்கி தினமும் 300 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை சம்பளமாகவும், பல்வேறு கவர்ச்சிகரமான சலுகைகளையும் அறிவித்து, நாட்டில் 30 சதவிகித மக்களை தங்கள் கட்சிக்கு வாக்குகளை அளிக்க கட்டாயப்படுத்தி வருகிறார்கள்.

இதன் காரணமாக வேட்பாளர்கள் வாக்குகள் பெறுவதற்கு பல வீடுகளை அனுகும்போது வீட்டில் வாக்காளர்கள் இல்லாத நிலை ஏற்பட்டு ஏமாற்றத்துடன் திரும்பும் நிலை தற்போது நிலவி வருகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஆளப்போகும் கட்சி மக்களுக்கு நிலையான ஆட்சியையும், பாதுகாப்பையும், மக்களின் எதிர்பார்ப்பை திருப்திகரமாக சேவை செய்யும் அதே நேரத்தில் மக்கள் நலன்களை விட்டுக்கொடுக்காத கட்சிதான் ஆட்சிக்கு வரவேண்டும் என்று நடுநிலையாளர்கள் விரும்புகிறார்கள்.

இதுவரையில் தமிழக மக்கள் கண்டிராத ஒரு தேர்தல் என்றால் அது இந்த 2021 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் என்றுதான் சொல்லவேண்டும். காரணம், இதுவரை தமிழகத்தை ஆண்ட கட்சிகளும், ஏற்கனவே ஆண்டு தற்போது ஆள நினைக்கும் கட்சிகளும் தங்களது எதிர்கால கட்சியின் நலனை கருத்தில்கொண்டு மக்களின் எதிர்பார்ப்புகளை எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் பூர்த்தி செய்யும் மனப்பக்குவத்தோடு, மேலும் மனமாற்றத்தோடு இந்தத் தேர்தல் கலத்தில் உண்மையான தேசப்பற்றும், ஊழலற்ற ஜனநாயக நடைமுறைப்படி ஜாதி, மதம், இனம் வேறுபாடில்லாமல் எந்தத் தேசிய, மாநிலக் கட்சிக்கும் சுயமரியாதையை விட்டுக்கொடுக்காமல் தமிழகத்தின் சரித்திரத்தையும், வரலாறையும் பார்த்து உண்மையான நல்லாட்சியை தமிழ்நாட்டுக்கு வழங்கும் நம்பிக்கையான ஒருவரை எதிர்பார்த்து தமிழக மக்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனை கருத்தில்கொண்டு தமிழக மக்கள் அனைவரும் அரசியல் கட்சிகள் கூறும் ஆசை வார்த்தைகள் மற்றும் இலவசங்களைக் கண்டு மகிழ்ச்சிகொள்ளாமல் நேர்மையான, நியாயமான வாக்குகளை இந்தத் தேர்தலில் பதிவு செய்து ஒரு நல்லாட்சி அமைய உறுதி கொள்ள வேண்டும்!

டாக்டர். **C.பால் பர்ணபாஸ்**
நிர்வாக ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்

டாக்டர் **N.கன்னையா**, Phd
முதன்மை ஆசிரியர்

# "பப்ளிக் லயபிலிட்டி பாலிசி"

## [Public liability policy Act 1991]

**LPG சிலிண்டர் இன்ஷூரன்ஸ் பாலிசியின் மூலம் ஒரு விபத்துக்கு ரூ.40 ரூ.50 லட்சமும், ஒரு நபருக்கு ரூ.10 லட்சம் வரையும் இழப்பீட்டைப் பெறலாம்.**

ஒருவேளை, விபத்தால் மரணம் ஏற்பட்டால், இறந்த ஒவ்வொரு நபருக்கும் தலா ரூ.5 லட்சம் காப்பீட்டுத் திட்டத்திலிருந்து இழப்பீடு வழங்கப்படும்.

இதைத் தவிர, மருத்துவக் காப்பீடாக ஒரு விபத்துக்கு ரூ.15 லட்சம் வரை பெற முடியும்.

விபத்துக்குப் பின் உடனடி நிவாரணமாக ஒரு நபருக்கு 25,000 ரூபாய் வரை வழங்கப்படும். விபத்தால் ஏற்படும் சொத்து சேதாரத்துக்காக ஒரு விபத்துக்கு ரூ.1 லட்சம் ரூபாய் வரை பெறலாம்.

காஸ் (Gas) சிலிண்டருக்கான இன்ஷூரன்ஸை சிலிண்டர் வைத்திருப்பவர்கள் எடுக்கத் தேவையில்லை.

அரசு விதிமுறைகளின்படி, காஸ் சிலிண்டர் விநியோகம் செய்பவர்கள் தாங்கள் கொடுக்கும் காஸ் இணைப்புக்கு கட்டாயம் இன்ஷூரன்ஸ் எடுக்க வேண்டும்.

இந்தக் காப்பீட்டுத் திட்டத்துக்கு `பப்ளிக் லயபிலிட்டி பாலிசி' (Public liability policy) என்று பெயர்.

பிரீமியம் செலவுகள் அனைத்தும் நிறுவனத்தையே சேரும்.

சிலிண்டரில் விபத்து ஏதும் ஏற்பட்டால், அதை உடனடியாக (30 நிமிடங்களுக்குள்) விநியோகஸ்தருக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் விபரத்தை நேரில் ஆய்வு செய்து, அதை இன்ஷூரன்ஸ் நிறுவனத்துக்குத் தெரிவிப்பார்.

க்ளைய்ம்(Claim) விண்ணப்பத்தையும் தருவார். காவல் துறைக்கு அந்த விபத்தைத் தெரிவிக்க வேண்டுமெனில், அதையும் வாடிக்கையாளரே செய்ய வேண்டும். இன்ஷூரன்ஸ் அதிகாரி விபத்து நடந்த இடத்தை நேரில் ஆய்வு செய்து வாடிக்கையாளரின் க்ளெய்ம் தொகையை நிர்ணயிப்பார்.




இதில் சிலிண்டர் இணைப்பு பெற்றிருக்கும் முகவரி, நபரின் பெயர் ஆகியவை சரியாக இருக்க வேண்டும்.

சிலிண்டர் இன்ஷூரன்ஸைப் பொறுத்தவரை, இவ்வளவு தொகைக்குதான் க்ளெய்ம் என எந்தவிதமான வரைமுறையும் கிடையாது.

விபத்தின் தன்மையைப் பொறுத்தும், அதன் பாதிப்பைப் பொறுத்தும் க்ளைய்ம் தொகை வித்தியாசப்படும்.



**K.தாந்தோணி**
மாநில இணைச் செயலாளர்- தமிழ்நாடு
மற்றும் துணை ஆசிரியர்,
தமிழ்நாடு நுகர்விழி



# FIR முதல் தகவல் அறிக்கை என்றால் என்ன...?

## FIR முழு விளக்கம்...!

**காவல் நிலையத்தில் புகார் கொடுப்பது எவ்வாறு என்பது பற்றிய அடிப்படை அறிவு ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும்.**

குற்றம் எந்த காவல்நிலைய எல்லைக்குள் நடந்ததோ அந்த காவல் நிலையத்தில் மட்டுமே புகார் கொடுக்கப்படவேண்டும்.

ஒரு வேலை தவறுதலாக வேறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால், அந்த காவல் நிலைய அதிகாரி முறையான காவல்நிலைய எல்லையை தெரியப்படுத்தி அறிவுறுத்த வேண்டும்.

கொலை செய்துவிட்டு முண்டத்தை கையில் எடுத்துக்கொண்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்த சம்பவங்கள் தமிழகத்தில் நடந்துள்ளன.

குற்றங்கள், பிடியாணை இன்றி கைது செய்யக்கூடிய குற்றங்கள் (Cognizable Offences), பிடியாணையுடன் மட்டுமே கைது செய்யக்கூடிய குற்றங்கள் (Non Cognizable Offence) என்று இரண்டாக சட்டத்தால் வகைப்படுத்தப்பட்டு உள்ளன.

பிடியாணையின்றி கைது செய்யக்கூடிய குற்றங்களுக்கு மட்டுமே காவல்துறை அதிகாரிகள் குற்றம் பற்றிய தகவல் கிடைத்ததும் முதல் தகவல் அறிக்கையை(FIR) CrPC பிரிவு 154 ன்கீழ் பதிவு செய்யமுடியும்.

காவல் நிலையத்திற்கு, ஒரு குற்றச் சம்பவம் தொடர்பான தகவலானது எழுத்து மூலமாக நேரடியாக கொடுக்கப்படவேண்டும். வாய்மொழியாக புகார் கொடுத்தால் அதை காவல்துறை அதிகாரி எழுத்தால் எழுதி புகார்தாரருக்குப் படித்துக் காட்டி கையெழுத் துப் பெறவேண்டும்.

புகாரில் தேதி, சம்பவ நேரம், சம்பவ இடம், சம்பவம் எப்படி நடந்தோ… அதை அப்படியே குறிப்பிடவேண்டும். புகாரில் சொல்லப்பட்ட குற்றச் சம்பவம் இந்திய சட்டங்களில் ஏதேனும் ஒன்றிலாவது குற்றமாக இருக்கவேண்டும்.

சில சமயங்களில் புகார் கொடுக்கும் பொழுது சட்டப்பிரிவுகள் பொருத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக, புகார் எழுதுபவர் அல்லது புகாரை எழுத உதவி செய்பவர் புகாரில் சங்கதிகளை கூட்டியோ குறைத்தோ எழுதுவார்கள்.

புகார் கொடுப்பவருக்கு உடனடியாக இலவசமாக முதல் தகவல் அறிக்கை நகல் கொடுக்கப்படவேண்டும்.

### புலன் விசாரணை…!

முதல் தகவல் அறிக்கை என்பது ஒரு குற்றம் சம்பந்தமாக காவல்நிலையத்திற்கு வரும் முதல் தகவல் பற்றிய அறிக்கையாகும்.

முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த பின்பு தான் புலன்விசாரணை தொடங்க வேண்டும்.

புகாரை பதிவு செய்யும் காவல்அதிகாரியே புலன் விசாரணையையும் செய்யக்கூடாது என்பது பெரும்பாலும் கடைபிடிக்கப்படும் நடைமுறை. அவ்வாறு செய்தால் உண்மையை கண்டறிய முடியாமல் போய்விட வாய்ப்புள்ளது.

போதை தடுப்பு பிரிவு காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பே புலன்விசாரணை சில வழக்குகளில் தொடங்கிவிடுகிறார்கள் காரணம் காவல் நிலையத்திற்கு வந்து முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்துவிட்டு புலன்விசாரணை செய்வது போதைபொருட்கள் கடத்தல் வழக்கு நடைமுறைகளில் சாத்தியம் இல்லை.

### FIR யார் யாருக்கு அனுப்பப்படும்…?

முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த அதிகாரி அதன் ஒரிஜினலை நீதிமன்றத்திற்கு உடனடியாக அனுப்பவேண்டும்.

ஒரு நகலை புலன் விசாரணை அதிகாரிக்கு, புலன் விசாரணைக்காக அனுப்பவேண்டும்.

ஒரு நகலை மாவட்ட காவல்துறை கட்டுப் பாட்டு அறைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஒரு நகலை புகார் கொடுப்பவருக்கு கொடுக்கவேண்டும்.

குற்றம் சாட்டப்பட்டவருக்கு முதல் தகவல் அறிக்கையின் நகல் நீதிமன்றத்தின் மூலமாக இலவசமாக கொடுக்கப்படும்.

ஒரு குற்றவழக்கை தொடங்கி வைப்பதே இந்த முதல் தகவல் அறிக்கை தான் ஒரு குற்றத்திற்கு ஒருமுறை தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும்.

ஒரே நேரத்தில் அல்லது தொடர்ச்சியாக ஒரே நபர்களால் செய்யப்பட்ட ஒரே வகையான அல்லது பல்வேறு வகையான குற்றங்களை ஒருங்கிணைத்தும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யலாம். குற்றத்தை செய்தவரே காவல் நிலையத்தில் நேரடியாக சென்றும் புகார் கொடுக்கலாம்.

### FIR மொழி…!

முதல் தகவல் அறிக்கை அந்தந்த மாநில மொழியில் பதிவு செய்யப்படும்.

ஒரே குற்றத்திற்கு இரண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படாது. மத்திய புலனாய்வு அமைப்பிற்கு ஒரு வழக்கு, புலன்விசாரணைக்கு மாற்றப்படும் போது அந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும் அப்பொழுது அதற்கு வேறு ஒரு எண் கொடுக்கப்படும்.

முதல் தகவல் அறிக்கைக்கு கொடுக்கப்படும் வரிசை எண்ணிற்கு குற்ற எண் (Crime Number) என்று பெயர். முதல் தகவல் அறிக்கை அச்சிட்ட படிவத்தில் இருக்கும்.

ஓடும் ரயிலில் குற்றம் நடந்தால் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வசதியாக ரயிலிலேயே ரயில்வே அதிகாரியிடம் முதல் தகவல் அறிக்கையின் படிவம் இருக்கும்.




முதல் தகவல் அறிக்கையை மட்டுமே வைத்து ஒருவருக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கிட முடியாது. இந்திய சாட்சிய சட்டத்தின் படி முதல் தகவல் அறிக்கையை சாட்சியங்களை முரண்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்த முடியும்.

முதல் தகவல் அறிக்கை தவறாக, கவனக் குறைவாக சட்டத்திற்கு புறம்பாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக புலன்விசாரணை அதிகாரிக்கு தெரியவந்தால் நீதிமன்றத்தில் CrPC 173 ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யும்பொழுது முதல் தகவல் அறிக்கையை முடிவுக்கு கொண்டுவரலாம்.

முதல் தகவல் அறிக்கையை தகுந்த காரண மின்றி பதிவு செய்யாமல் மறுப்பு தெரிவிக்க காவல் அதிகாரிக்கு அதிகாரமில்லை. புகாரில் கையெழுத்திட மறுக்கவும் புகார்தாருக்கு உரிமையில்லை.

பொய்யாக முதல் தகவல் அறிக்கை வேண்டும் என்றே குற்றச்சம்பவம் எதுவும் நடக்காமல் சம்பவம் நடந்ததாக புனைந்து பதிவு செய்யப் பட்டால் அதற்கு காவல்துறை அதிகாரியும் உடந்தையாக இருந்தால் புகார்தாரர் மற்றும் காவல்துறை அதிகாரி மீது குற்றநடவடிக்கை தொடரமுடியும்.

## குற்றமுறையீடு...!

Private complaint 200 CrPc...!

காவல் நிலையத்தில் மட்டுமே ஒரு குற்ற வழக்கு சம்பந்தமாக புகார் கொடுக்க முடியும் என்பதல்ல, நீதிமன்றங்களிலும் புகார் கொடுக்கலாம்.

சில குற்றங்களை பொருத்து நீதிமன்றத்தில் மட்டுமே புகார் கொடுக்க முடியும் என்று சட்டம் தெளிவாக இருக்கும் போது நீதிமன்றத்தில் மட்டுமே புகார் கொடுக்கமுடியும்.

உதாரணமாக காசோலை மோசடி வழக்கை மாற்று முறை ஆவணச் சட்டத்தின் படி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மட்டுமே தாக்கல் செய்யவேண்டும்.

காவல் நிலையத்தில் புகார் கொடுக்க முடியாது.

அவதுறு செய்துவிட்டதாக குற்றவழக்கு நீதிமன்றத்தில் மட்டுமே தாக்கல் செய்யமுடியும்

நீதிமன்றங்களில் மட்டுமே தாக்கல் செய்யப் படும் புகார்களை காவல்நிலையங்களில் தாக்கல் செய்யமுடியாது. ஆனால் காவல் நிலையங்களில் கொடுக்கப்படும் புகார்களை காவல்துறையினர் ஏற்க மறுக்கும் பொழுது நீதிமன்றத்தில் புகார் கொடுக்க முடியும்.

குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 200 குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் புகார் கொடுப்பதை வரையறுக்கிறது.

நீதிமன்றத்தில் புகார் கொடுக்கும் போது நீதிமன்றம் அந்த புகாரை காவல்துறை விசாரணைக்கு உத்தரவிடுவது உகந்தது என கருதினால் குற்றம் நடந்ததாக கருதப்படும் எல்லைக்குட்பட்ட காவல்நிலைய அதிகாரிக்கு புலன் விசாரணைக்கு உத்தரவிடலாம்.

## CrPc 56(3)

காவல்துறை அதிகாரி நீதிமன்றத்தால் புலன்விசாரணைக்கு உத்தரவிடும் புகார்களின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளவேண்டும் நீதிமன்றத் தில் குற்றவழக்கு யார் வேண்டுமானாலும் தாக்கல் செய்யலாம். வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என கட்டாயம் இல்லை. புகார் கொடுப்பவர் நேரிடையாக நீதிமன்றத்தில் ஆஜராகலாம்.

நீதிமன்றத்தில் குற்றவழக்கு தாக்கல் செய்வது என்பது ஒரு திறமையான கலை. சட்டமும் சங்கதிகளும் சரியாக பொருந்தக்கூடியதாக புகார் தயாரிக்கப்பட வேண்டும் இதற்கு திறமை யான வழக்கறிஞரின் உதவி கட்டாயம் தேவை.

# வங்கி கடன் கிரடிட் கார்டு வாங்கியுள்ளோர் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள்...!



1. வங்கியில் கடன், கிரடிட் கார்டு, கல்வி கடன் வசூல் என எதுவாக இருந்தாலும் எல்லாமே சிவில் நடை முறைதான்.

2. எக்காரணம் கொண்டும் வங்கிகள் கடனாளர் மீது கிரிமினல் நடவடிக்கைகளை எடுக்கக்கூடாது. இது ரிசர்வ் வங்கியின் வழிமுறை.

3. கடனின் தவணைகள் தாமதமானால், வங்கி முறைப்படி பணத்தை கேட்கலாம் அல்லது கடிதம் அனுப்பலாம், மாறாக கடன் வாங்கியோரின் வீட்டினுள் நுழைந்து பணம் வசூலிக்க முயலுவது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 441 யின் படி குற்றம்.

4. பணத்தை கேட்டோ, வசூலிக்கவோ வங்கி ஊழியர்களோ, முகவர்களோ செல்போனில் அவதூறாக பேசினால், IPC Section 499 படி மிரட்டினால் IPC Section 503 படி வீட்டின் வெளியே நின்று பலர் முன்னிலையில் கெட்ட வார்த்தை பேசினால் IPC section 294B படி குற்றம் ஆகும்.

5. கடன் தவணையை கேட்டு தொடர்ந்து வங்கி தொல்லை கொடுத்தால் மேற்கண்ட பிரிவுகளை குறிப்பிட்டு அருகிலுள்ள காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டும்.

6. அதேநேரம் உங்கள் பகுதியில் உள்ள சிவில் நீதிமன்றத்தில் Order VII, Rule 1 of Civil Proceedure Code யில் மனு தாக்கல் செய்து, Order XXXIX, Rule 1 of Civil Proceedure Code யில் தடை உத்தரவை பெறலாம்.

7. கடன் தவணை நிலுவை தொகையை வசூலிக்க வங்கி சிவில் நடைமுறையை மட்டுமே பயன்படுத்த வேண்டும், ஊழியர்களை, முகவர்களை கொண்டு மிரட்டுவது குற்றம்.



# 5 ரூபாய்க்காக ரூ.20,000




**நெல்லை மாவட்டம் வீரவநல்லூரைச் சேர்ந்தவர், பிரபாகரன். வழக்கறிஞரான இவர் கடந்த ஆண்டு மே மாதம் 4ம் தேதி சொந்த வேலைக்காக காரில் தூத்துக்குடிக்குச் சென்றார். நெல்லை தூத்துக்குடி நான்கு வழிச்சாலையில் வாகைகுளத்தில் உள்ள டோல்கேட்டில் திரும்பிச் செல்வதற்கான கட்டணத்தையும் சேர்த்து (ரிட்டர்ன் பாஸ்) பணம் செலுத்தியிருக்கிறார்.**

அவரிடம் இருந்து ரூ.90 கட்டணத்தை எடுத்த டோல்கேட் ஊழியர், அதற்கான ஒப்புதல் சீட்டைக் கொடுத்திருக்கிறார். வேலையை முடித்த பின்னர் திரும்பி வரும்போது அங்கிருந்த அறிவிப்புப் பலகையைப் பார்த்தபோது அதில், திரும்பிச் செல்வதற்கான பயணத்துக்கும் சேர்த்து ரூ.85 என எழுதி வைக்கப்பட்டிருந்தது.

டோல்கேட் பணியாளரிடம் இதுபற்றி

# அபராதம் விதித்த நீதிமன்றம்

முறையிட்டதற்கு, 'வாங்கிய பணத்துக்கு ரசீது கொடுத்திருக்கிறோம். அதனால் பேசாமல் போங்க. இதுபற்றி எங்கே வேண்டுமானாலும் சொல்லுங்க' எனப் பலர் முன்னிலையில் பேசி யிருக்கிறார்.

இது பற்றி டோல்கேட் மேலாளரிடம் புகார் செய்தபோது, 'அறிவிப்பு பலகையில் எழுதியிருப்பதை மட்டுமே வசூல் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. நாங்கள் கேட்பதைக் கொடுத்துவிட்டுப் போங்க' என்று பேசியுள்ளனர்.

இந்த விவகாரத்தை டோல்கேட் ஒப்பந்த தாரரின் கவனத்துக்கு எடுத்துச் சென்றபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளான பிரபாகரன், இந்த விவகாரம் தொடர்பாக நெல்லை நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

நுகர்வோர் நீதிமன்றம் நுகர்வோர் நீதிமன்றம் மனுதாரர் சார்பாக வழக்கறிஞர் பிரம்மா ஆஜராகி, 'டோல்கேட் நிர்வாகத்தினர் கூடுதல் கட்டணம் வசூலித்துள்ளனர். தனக்கு சேவைக் குறைபாடு ஏற்பட்டது தொடர்பாக டோல்கேட்டில் குறிப்பிட்டுள்ள டோல்ஃப்ரீ நம்பரில் பேசியிருக்கிறார். அதில் பேசிய சூப்பர் வைசர், தன்னால் எதுவும் செய்ய இயலாது என்றும் மேலாளரிடம் பேசச் சொல்லியுள்ளார்.

ஆனால், மனுதாருக்கு ஏற்பட்ட சேவைக் குறைபாட்டைத் தீர்க்காமல் அவரை மன உளைச்சலுக்கு உள்ளாக்கியுள்ளனர். மனுதாரருக்கு ஏற்பட்ட சேவைக் குறைபாட்டுக்கு டோல்கேட் நிர்வாகத்தினரே பொறுப்பு என்பதால் அவருக்கு இழப்பீடாக ரூ.95,000 வழங்க வேண்டும்' என வாதாடினார்.

இந்த வழக்கை விசாரித்த நெல்லை மாவட்ட நுகர்வோர் நீதிமன்ற நீதிபதி தேவதாஸ், உறுப்பினர்களான சிவமூர்த்தி, முத்துலட்சுமி ஆகியோர், 'டோல்கேட் நிர்வாகம் மனுதாரரிடம் கூடுதலாக ரூ.5 வசூல் செய்திருப்பது நேர்மையற்ற வணிகம்' எனத் தீர்ப்பளித்தனர்.




"டோல்கேட் நிர்வாகத்தால் மனுதாரருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்காக அவருக்கு ரூ.15,000 மற்றும் வழக்கு செலவுக்காக ரூ.5000, மனுதாரரிடம் கூடுதலாக வசூல் செய்த ஐந்து ரூபாய் ஆகியவற்றைச் சேர்த்து மொத்தமாக ரூ.20,005 வழங்க வேண்டும்.

இந்தத் தொகையை மனுதாரருக்கு ஒரு மாத காலத்துக்குள் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்கத் தவறினால் 6 சதவிகித வட்டியுடன் சேர்த்துக் கொடுக்க வேண்டும்" என உத்தரவு பிறப்பித்தனர்.



தகவல்: **J.செல்வம்**
மாநில அமைப்பாளர் மற்றும் செய்தி நிருபர்,
தமிழ்நாடு நுகர்விழி
82200 82727

# சென்னை மாவட்ட செய்திகள்










தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு மற்றும் அகில இந்திய மக்கள் உரிமைகள் பாதுகாப்பு கழகத்தின் சார்பில் மாநில ஆலோசனைக் குழு கூட்டம் கடந்த 07.02.2021 அன்று சென்னை எழும்பூரில் உள்ள நக்கீரர் அரங்கத்தில் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு அகில இந்திய மக்கள் உரிமைகள் பாதுகாப்பு கழகத்தின் மாநில தலைவரும், காஞ்சிபுரம், செங்கலபட்டு மாவட்டங்களின் தலைவருமான டாக்டர் D.C. ஜான் இளங்கோவன் தலைமை தாங்கினார் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பின் மாநில பெருந் தலைவர் டாக்டர் திரு செ. பால்பர்ணபாஸ் அவர்கள் முன்னிலை வகித்தார். 250க்கும் மேற்பட்ட நுகர்வோர் பெருமக்கள் மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் பெரும்பாலோர் கலந்து கொண்டார்கள்.

# சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி செய்திகள்







தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு சென்னை மற்றும் அகில இந்திய மக்கள் உரிமைகள் பாதுகாப்பு கழகம் திருவல்லிக்கேணி கிளை சார்பில் மாதாந்திர பொதுக்கூட்டம் நேற்று 06.03.2021 அன்று, மாலை 7.00pm மணி அளவில் ரங்கா திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாநில துணை செயலாளர் – திருவல்லிக்கேணி பகுதி தலைவர் ஜெகன் பாபு, பகுதி துணை தலைவர் ஹரி கிருஷ்ணன், யோகா அன்பரசன் அவர்கள், ஜேம்ஸ் விக்டர் அவர்கள், பகுதி செயலாளர்கள் செல்வ குமார் – சுபாஷினி, பகுதி மற்றும் கிளை உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். பகுதி சார்பான சேவை மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு நடவடிக்கைகள் குறித்து கலந்தாலோசனை நடைபெற்றது. நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் அனைவரும் வாக்களிப்போம் என உறுப்பினர்கள் அனைவரும் உறுதியேற்றனர்.

செல்வ குமார், செயலாளர்,
திருவல்லிக்கேணி பகுதி







# திருவள்ளூர் மாவட்ட செய்திகள்

திருவள்ளூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு இணைப்பு மற்றும் அங்கீகாரம் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்புப் பேரமைப்பு என்ற அமைப்பின் சார்பில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஈக்காடு கிளையின் தலைவர் திரு. இமானுவேல் வேதமுத்து அவர்களின் இல்லத்தில் மாவட்ட ஆலோசனை கூட்டம் 22.02.2021 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் தலைவர் திரு.ஜெ. லூர்துசாமி தலைமை தாங்கினார்.

நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். மாவட்ட அமைப்பின் வளர்ச்சி குறித்தும், மாநிலத் தலைவரின் அனுமதியுடன் மாநாடு ஒன்றை நடத்திடவும், அதிகளவில் உறுப்பினர்களை அமைப்பில் இணைத்திடவும், முன்மாதிரி மாவட்டமாக திருவள்ளூர் மாவட்டத்தை உருவாக்குவதென முக்கிய தீர்மானங்கள் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டது.











# திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூரில் சுதந்திர தின விழா மாவட்டத் துணைத் தலைவர் திரு. அன்பானந்தம் பங்கேற்பு!





திருநின்றவூர் இரண்டாவது குறுக்குத் தெரு, அந்தோணி நகர் பொதுநல சங்கத்தின் சார்பாக கடந்த 26.1.2021 அன்று 71வது குடியரசுதின விழா கொண்டாடப்பட்டது. சங்கத்தின் தலைவர் திரு. இந்திரன் அவர்கள் கொடியேற்றி மக்களுக்கு இனிப்பு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பின் திருவள்ளூர் மாவட்டத் துணைத் தலைவர் திரு. அன்பானந்தம் மற்றும் பலர் பங்கேற்றனர்.

*With best compliments from*

**K. JAYAKUMAR, ,** M.A., Public. Admin.
Founder / Chairman
94441 04600 | 94445 40110

**APJ GROUP OF COMPANY**

Consulting Services| Marketing Services| Nidhi Limited|Financial Services
Catering Services| E seva | Educational Acadamy | Trusts | Real Estates
Life Insurance Services | Star Health Insurance Services

No.92A, Balaji Nagar Main Road,A-1, S.B.Vishal Flats,
Ist Floor, Kolathur, Chennai-600 099 India. Tel : +91 63793 50549
E-Mail : jayakumar75@gmail.com | apjgroupofcompanies@gmail.com
Web : https://popshop.in/invite/YFjPU6

# வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம்




கடந்த 2019ம் ஆண்டு, www.tenancy.tn.gov.in என்ற பிரத்யேக போர்ட்டலை தமிழ்நாடு உரிமைகள் மற்றும் நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களின் பொறுப்புகள் சட்டம் 2017 என்ற புதிய சட்டத்தின் கீழ் அறிமுகப் படுத்தியுள்ளது, இது முந்தைய தமிழக கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம், 1960, மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

அனைவருக்கும் மலிவு வீட்டுவசதி என்ற வரிசையை எடுத்துக்கொண்டு, வீட்டு வசதி வாய்ப்புகளுக்கு சிறந்த அணுகு முறையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் குத்தகை உரிமைகளை வழங்குவதில் வீட்டு உரிமையாளர்களின் அச்சத்தைத் தணிப்பதோடு, குத்தகைதாரர்களின் உரிமைகள் மற்றும்பொறுப்புகளைச்செயல்படுத்துவதற்கான சிறந்த கட்டமைப்பையும் நிறுவுகின்றது.

இந்த இடுக்கையில்,தமிழ்நாடு நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விதிமுறைகள் 2017, (சட்டம்) - இன் விவரக்குறிப்புகள், மேலும் பழைய சட்டத் திலிருந்து புதிய சட்டத்தின் மாற்றங்கள் மற்றும் வேறுபாடுகள்.

### 1. சுயபரிசோதனை சட்டத்தின் செயல்பாடு:

TNRRLT சட்டம் 2019 பிப்ரவரி 22 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது, மேலும் இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் செயல்படுத்தப்பட்ட குத்தகை ஒப்பந்தங்களை நிர்வகித்து கட்டாயப்படுத்தியுள்ளது. இது 90 நாட்களுக்குள் வாடகை அதிகாரசபையில் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும்.

### 2. கட்டாய பதிவு:

குத்தகைதாரரின் காலம் மற்றும் மதிப்பைப் பொருட்படுத்தாமல், பழைய வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் படி வாடகைதாரர்களின் ஒப்பந்தம் 11 மாதங்களுக்கு மேல் அல்லது ரூ. 50,000 மதிப்பில் இருந்தால்

**பிழை திருத்தம்!**

கடந்த டிசம்பர் 2020 மாதம் வெளிவந்த தமிழ்நாடு நுகர்விழி மாத இதழில் 11ஆம் பக்கத்தில் புதிய ரேஷன் கார்டு வாங்கும்போது ரூ.10 கட்டவேண்டும் என்று தவறுதலாக அச்சிடப் பட்டுள்ளது. ஆனால், புதிய ரேஷன் கார்டு தற்போது ஸ்மார்ட் கார்டாக வருகிறது. அதற்கு கட்டணம் எதுவும் தேவையில்லை!

, புதிய சட்டத்தின் படி அனைத்து குத்தகை ஒப்பந்தங்களையும் வாடகை அதிகாரசபையில் பதிவு செய்ய கட்டளையிட்டுள்ளது.

இது வணிக மற்றும் குடியிருப்பு வாடகைதாரர்களை உள்ளடக்கியது; கல்வி பயன்பாட்டிற்காக வளாகத்தைப் பயன்படுத்துவது உட்பட இதில் சேரும். ஆனால் தொழிற்சாலைகள் சட்டம், 1948 இன் கீழ் பதிவுசெய்யப்பட்ட வளாகங்கள் இதில் இடம் பெறாது.

### 3. யாரெல்லாம் விண்ணப்பம் தாக்கல் செய்யலாம்...?

நில உரிமையாளர், குத்தகைதாரர் அல்லது சொத்து மேலாளர் ஆகியோர் விண்ணப்பம் தாக்கல் செய்யலாம்.

### 4. எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் மற்றும் பதிவின் அவசியம்:

சட்டத்தின் பிரிவு 4 இன் படி, அனைத்து குத்தகைகளும் ஒரு ஒப்பந்தத்தின் மூலம் எழுத்துப்பூர்வமாக செயல்படுத்தப்படும். சட்டம் தொடங்குவதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட வாய்வழி குத்தகைதாரர்களைப் பொறுத்த வரையில், சட்டத்தின் அறிவிப்புத் தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் குத்தகைதாரரின் விதிமுறைகளை எழுத்துப்பூர்வமாகக் குறைக்கும். இதன் விளைவாக, குத்தகைதாரர் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து 90 நாட்களுக்குள் வாடகை அதிகாரசபையில் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவது தனித்தனியாக கோரப்பட வேண்டும்.

### 5. முத்திரை சட்டத்தின் (Stamp Duty Act) கீழ் உள்ள தேவைகள்:

அனைத்து குத்தகை ஒப்பந்தங்களும் இந்திய முத்திரை சட்டம், 1899 இன் பிரிவு 35 ன் படி முத்திரையிடப்பட வேண்டும்.

### 6. சட்டப்படி பதிவு செய்வது சுதந்திரமானது:

புதிய சட்டத்தின் கீழ் பதிவு செய்வது இந்திய பதிவுச் சட்டத்தின் கீழ் தேவைப்படும் பதிவிலிருந்து சுதந்திரமாக உள்ளது. புதிய சட்டத்தின் கீழ் வாடகை அதிகாரசபையில் ஒப்பந்தத்தை பதிவு செய்வதோடு கூடுதலாக, இந்திய பதிவுச் சட்டத்தின்படி ஒப்பந்தங்களை பதிவு செய்ய கட்சிகள் இன்னும் பொறுப்பாகும்.

### 7. செலுத்த வேண்டிய மொத்த வாடகையின் கணக்கீடு:

குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டிய வாடகை, அபராதம், பிரீமியம் அல்லது முன்கூட்டியே ஏதேனும் இருந்தால் மொத்த தொகையாக, 'செலுத்த வேண்டிய மொத்த வாடகை' என்ற தொகுப்பின் கீழ் செலுத்த வேண்டி இருக்கும்.

### 8. இச்சட்டம் விடுப்பு, உரிமம், சொத்து மேலாண்மை ஒப்பந்தங்களை உள்ளடக்குமா...?

இச்சட்டம் குத்தகைதாரர் பற்றிய விரிவான குறியீடாக இருக்கும். இதேபோன்ற இயல்புடைய உரிம ஒப்பந்தங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் கீழ் பதிவு குத்தகை / குத்தகை ஒப்பந்தங்களுக்கு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, ஒப்பந்தத்திற்கு 'உரிமம்' அல்லது 'விடுப்பு & உரிமம்', 'சொத்து மேலாண்மை ஒப்பந்தம்' என்ற தலைப்பில் இருந்தாலும், ஒப்பந்தத்தின் விதிமுறைகள் அசையாச் சொத்தில் ஏதேனும் உரிமையை உருவாக்கினால், அத்தகைய ஒப்பந்தத்தை இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட வேண்டும். ஒப்பந்தத்தின் 'விதிமுறைகள்' ஒப்பந்தத்தின் தன்மையை தீர்மானிக்கும்.

### 9. புதுப்பித்தல் குறித்த பதிவு தேவைகள்:

இது தொடர்பாக வடிவமைக்கப்பட்டுள்ள விதிகளில் எந்தவொரு புதுப்பித்தலும் மீண்டும் பதிவு செய்யப்பட்ட புதிய குத்தகைதாரராகவே கருதப்படுவதாகக் கூறுகின்றன. பழைய சட்டத்தைப் போலன்றி, பதிவுசெய்தல் செயல்முறை ஆன்லைனில் செய்யப்பட்டுள்ளது, மேலும் குத்தகைதாரர் ஒப்பந்தத்தை பதிவு செய்வதற்கு கட்டணம் ஏதும் இல்லை, இருப்பினும், பெயரளவிலான சேவை கட்டணம் பதிவு செய்ய போர்ட்டல் மூலம் வசூலிக்கப்படும்.

தமிழ்நாடு மாநிலத்தில் நகரமயமாக்கலின் விரைவான வளர்ச்சியுடன், புதிய சட்டத்தை அமல்படுத்துவது குத்தகைதாரர்கள் மற்றும் நில உரிமையாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை அனைவருக்கும் மலிவு வீடுகளை வழங்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட செய்திகள்

நமது பேரமைப்பின் காஞ்சிபுரம்/ செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைவர் Dr.D.C.ஜான் இளங்கோவன், அவர்களின் தலைமையில் கடந்த 21.03.2021 (ஞாயிற்றுக்கிழமை) காலை 11.30 மணி அளவில் காயரம்பேடு பகுதியில் உள்ள சுதா மருத்துவமனை வளாகத்தில், உலக நுகர்வோர் தின விழா மற்றும் நிர்வாக கலந்தாய்வு மற்றும் வளர்ச்சிக்கான கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில்

மாநில அமைப்பாளர் திரு. J.செல்வம், மாநில இணை ஒருங்கிணைப்பாளரும், மடிப்பாக்கம் கிளை தலைவருமான திரு.M.சுரேஷ் குமார், மடிப்பாக்கம் கிளை செயலாளர் திரு. M.கனிசெல்வம், திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூர் பகுதி தலைவர் சேர்மாக்கனி, பகுதி செயலாளர் திரு. வெற்றிவேல் செழியன் மற்றும் பலர் முன்னிலை வகித்தார்கள், காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் ஜெயபால் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார்,

இந்நிகழ்ச்சியில் முக்கிய நிகழ்வாக அமைப்பின் மாநில தலைவர் *டாக்டர் செ. பால்பர்ணபாஸ்* அவர்கள் அனுப்பிய உலக நுகர்வோர் உரமைகள் தின விழா *விழிப்பணர்வுவாழ்த்துச் செய்தியை* காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களின் தலைவர் டாக்டர் *D.C. ஜான் இளங்கோவன்* வாசித்தார், செங்கலபட்டு மாவட்ட செயலாளராக திரு. டாக்டர்.














நெல்சனும், மாவட்ட இணைச் செயலாளராக திரு. மணிகண்டன்,திரு.G.பாலகிருஸ்ணன்,திரு.J.கோபாலகிருஸ்ணன்,திரு.ஜெகன் இன்பராஜி, திரு.அரிஸ்குமார், திரு.N.மணி, திரு.குணசேகரன் அவர்கள் அனைவரும். திருவள்ளூர் மாவட்ட செயலாளராக திரு.G.அருணகிரியும், ஆகியோர்களின் பெயர்களை அகில இந்திய மக்கள் உரிமைகள் பாதுகாப்பு கழகத்தின் மாநில தலைவர் என்ற முறையில் திரு D.C.ஜான் இளங்கோவன் அவர்கள் முன் மொழிந்தார். விழா குழுவினர் அனைவரும் வழி மொழிந்தார்கள். மேலும் மாவட்ட வளர்ச்சி மற்றும் மேம்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது இந் நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள்,உறுப்பினர்கள் உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சி இறுதியாக மாவட்ட பொருளாளர் திரு. பூஷ்ன குமார் நன்றியுரை நிகழ்த்தினார்.

# நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்...!

**இந்தியாவில் வாழும் மக்களின் நுகர்வுத் தன்மையை பாதுகாக்கும் பொருட்டு இந்திய அரசால் ஏற்படுத்தப்பெற்றச் சட்டமாகும். ஜூலை 1, 1987 முதல் இச்சட்டம் அமலுக்கு வந்தது.**

இச்சட்டம் 1991 மற்றும் 1993 களில் திருத்தச் சட்டங்களாக வெளிவந்தன். நுகர்வோர் பாது காப்பை மேலும் வலுப்படுத்தும் விதமாகவும், அதன் செயற்பாடுகள், முக்கியத்துவங்கள் அதிகரிக்கப்பட்டு டிசம்பர், 2002 இல் புதிய திருத்தச்சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, மார்ச் 15, 2003 புதிய பரிமானங்களுடன் வெளி யிடப்பட்டு அமலுக்கு வந்தது.

இதன்படி வடிவமைக்கப்பட்ட விதிகள் நுகர்வோர் பாதுகாப்பு விதிகள், 1987 என அழைக்கப்படுகின்றன. இந்த விதிகள் மார்ச் 5, 2004 முதல் நாட்டுக்கு அறிமுகம் செய்யப் பட்டது.

**நுகர்வோரின் உரிமைகள்:**

கீழே காணப்படும் நுகர்வோரின் உரிமை களைப் பாதுகாப்பதற்காக இச்சட்டம் இயற்றப் பட்டது.

உயிருக்கும் உடைமைகளுக்கும் தீங்கு விளைவிக்ககூடிய பொருட்களை சந்தைப்படுத்து வதில் இருந்து பாதுகப்பு பெறும் உரிமை நேர்மையற்ற வர்த்தக செயல்முறைகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, சந்தையில் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம், அளவு, தூய்மை, தரனிலை மற்றும் விலை பற்றிய அனைத்து விவரங்களையும் அறிந்துகொள்வதற்கான உரிமை.



பலவகைப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை போட்டி விலைகளில் வாங்குவதற் கான வாய்ப்புகளைப் பெறுவதற்கான உரிமை.

நுகர்வோரின் குறைகளைக் கேட்பதற்கும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் உத்தரவாதம் பெறும் உரிமை.

நேர்மையற்ற வர்த்தகச் செயல்முறைகள் மற்றும் கட்டுப் படுத்தும் வர்த்தகச் செயல் முறைகள் போன்றவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான உரிமை

நுகர்வோருக்கான விழிப்புணர்வினைப் பெறும் உரிமை.

நுகர்வோரின் சச்சரவுகளுக்கு விரைவாகவும் எளிமையாகவும் தீர்வு பெறும் உரிமை.



**முக்கிய கூறுகள் :**

இச்சட்டம் மைய அரசால் விலக்கு அளிக்கப் பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளைத் தவிர ஏனைய எல்லா பொருட்களுக்கும், சேவைகளுக்கும் இச்சட்டம் பொருந்தும்.

அனைத்துறையின் எதுவாயினும், தனியார் மற்றும் பொதுத் துறை மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் அல்லது தனி நபர் இவை யாவரையும் கட்டுப் படுத்தும். இச்சட்டம் வகுத்துள்ளதின்படி இவர்கள் நட்டஈடு வழங்க அதே சமயத்தில் தடை செய்யவோ,தண்டணை வழங்கவோ வழி செய்கின்றது.

**நுகர்வோரை போற்றிப் பேணுகின்ற உரிமை களாவன:** (1) உடலுக்கும், உடமைக்கும் தீங்கு விளைகின்ற வகையில் வணிக நோக்கில் விற்கப் படும் பொருட்கள் மற்றும் சேவைகளிடமிருந்து நுகர்வோர் தங்களை பாதுகாத்துக்கொள்ளும் உரிமை.



(2) பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம், எடை, வீரியம், கலப்படமற்ற, தரநிர்ணயம் மற்றும் விலை அறிந்து கொள்ளவும், நேர்மையற்ற வணிகத்தினரிடமிருந்து நுகர்வோர் தங்களை தற்காத்துக் கொள்ளும் உரிமை.

(3) மலிவு அல்லது போட்டி விலைகளில் கிடைக்கும் பலதரப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் குறித்த நம்பகத்தன்மையை நுகரவோருக்கு உறுதிபடுத்துதல் உரிமை.

(4) மலிவான சலுகை விளம்பரங்கள் மற்றும் ஊடகங்களினால் இழுக்கப்பட்டு, அதன் பலனை வணிகத்தினர்கள் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டதை தெரிவிக்கும் உரிமை.

(5) நேர்மையற்றை வணிகத் தொழி லினால் அல்லது மனச்சாட்சியற்ற சுரண்டல்களினால் ஏற்பட்ட பாதிப்பினால் நுகர்வோர் குறைதீர்க்கும் மையத்தை நாடுதல் உரிமை.

**நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் செயற்பரப்பு எல்லை**

இந்த சட்டம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும். ஆனால் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு மட்டும் இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகிய வற்றுக்கு மட்டுமே இந்தச் சட்டம் பொருந்தும். இந்திய அரசு அறிவிப்பில் குறிப்பிட்ட சில பொருள்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தனியார் துறை, பொதுத்துறை, கூட்டுறவுத் துறை போன்றவை களுக்கும் இச்சட்டம் பொருந்தும்.

**சட்டம் பொருந்தாத நிலைகள்:** வாங்கிய பொருளை மறு விற்பனை செய்தல் அல்லது இலாபம் ஈட்ட வேண்டும் என்கிற நோக்கத்துக்கு வாங்கப்பட்ட பொருள்.

இலவசமாக பெற்ற பொருள் அல்லது இலவச சேவை...!

**உதாரணம் :** அரசு மருத்துவமனைகளில் பெறும் இலவச மருத்துவ சேவை.

இலவச அனுமதியளிக்கும் திட்டங்களில் பெறும் சேவை குறைபாடுகளுக்கு இச்சட்டத்தின் படி வழக்கு தொடர முடியாது.

**நுகர்வோர் தகராறு தீர்க்கும் முகமைகள்**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986 பிரிவு 9ன் கீழ் இந்தியாவில் மூன்று நிலை யிலான முகமைகள் செயல்படுகின்றன.

மாவட்டக் குழு கீழ்நிலையில் செயல்படுகிறது இது மாவட்ட நுகர்வோர்

குறைதீர் மன்றம் என அழைக்கப்படுகிறது.

இம்மன்றத்தில் 20 இலட்சம் ரூபாய் வரையிலான நஷ்ட ஈடுக்கான வழக்குகள் மட்டும் இங்கு நடத்தப் பெறும்.

மாநிலக் குழு இடைநிலையில் செயல்படுகிறது. இது மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் என அழைக்கப்படுகிறது.

இங்கு 20 இலட்சத்திற்கு மேல் 100 இலட்சம் ரூபாய் வரையிலான நஷ்ட ஈடுக்கான வழக்குகள் மட்டும் இங்கு நடத்தப் பெறும்.

தேசியக் குழு உச்சநிலையில் செயல்படுகிறது. இது தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் என அழைக்கப்படுகிறது.

இங்கு 100 இலட்சம் ரூபாய்க்கு அதிகமான நஷ்ட ஈடுக்கான வழக்குகள் இங்கு நடத்தப் பெறும்.

மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் மேலான முறையீடுகள் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திலும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மேலான மேல் முறையீடுகள் தேசீய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திலும் செய்யப்பட வேண்டும்.

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவுகளின் மேலான முறையீடுகள் இந்திய உச்சநீதி மன்றத்தில் செய்யப்பட வேண்டும்.

**மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம்:** மாவட்டக் குறைதீர் மன்றத்தை இந்திய அரசின் முன் ஒப்புதலுடன் ஒவ்வொரு மாநில அரசும் மாவட்ட அளவில் இம்மன்றத்தை அமைத்திட வேண்டும். இம்மன்றத்தின் தலைவர் பதவிக்கு மாவட்ட நீதிபதி தகுதியுடையவர் தலைவராகவும், இரண்டு உறுப்பினர்களைக் கொண்டும் அமைக்கப்பட வேண்டும்.

இருவரில் ஒருவர் பெண் உறுப்பினராக இருக்க வேண்டும். பெண் உறுப்பினர் சமூக சேவையில் ஆர்வமுடையவராக இருக்க வேண்டும். மற்றொரு உறுப்பினர் சமூக சேவை, பொருளாதாரம், வணிகம், தொழில், சட்டம், கணக்கியல் போன்ற துறைகளில் போதுமான அறிவும் முன் அனுபவமும் இருக்க வேண்டும். ஆக இந்த மன்றத்தில் தலைவர் உட்பட மூன்று உறுப்பினர்கள் இருப்பர்.

இம்மன்றத்தில் மாவட்ட எல்லையிலான வழக்குகள் மற்றும் 20 இலட்சம் ரூபாய் வரையிலான நஷ்ட ஈடுக்கான வழக்குகள் நடத்தப் பெறுகின்றன.

**மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்:** மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை இந்திய அரசின் முன் ஒப்புதலுடன் ஒவ்வொரு மாநில அரசும் மாநிலத் தலைநகரில் அமைத்திட வேண்டும். இந்த ஆணையத்தின் தலைவர் பதவிக்கு மாநில அரசால் நியமிக்கப்பட்ட உயர்நீதி மன்றத்தின் நீதிபதி தலைவராகவும், இரண்டு உறுப்பினர்களைக் கொண்டும் அமைக்கப்பட வேண்டும்.

இருவரில் ஒருவர் பெண் உறுப்பினராக இருக்க வேண்டும். இரு உறுப்பினர்களும் சமூக சேவை, பொருளாதாரம், வணிகம், தொழில், சட்டம், கணக்கியல் போன்ற துறைகளில் போதுமான அறிவும் முன் அனுபவமும் இருக்க வேண்டும்.

ஆக இந்த மன்றத்தில் தலைவர் உட்பட மூன்று உறுப்பினர்கள் இருப்பர்.

இந்த ஆணையத்தில் மாநில எல்லையிலான 20 இலட்சத்திற்கு மேல் 100 இலட்சம் ரூபாய் வரையிலான நஷ்ட ஈடுக்கான வழக்குகள் மற்றும் மாவட்டக் குறைதீர் மன்றத்தின் ஆணையின் மேலான முறையீடுகள் நடத்தப் பெறுகின்றன.

**தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம்...!**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை இந்திய அரசு, புதுதில்லியில் அமைத்துள்ளது. இந்த ஆணையத்தின் தலைவர் பதவிக்கு உச்சநீதி மன்றத்தின் நீதிபதி தலைவராகவும், நான்கு உறுப்பினர்களைக் கொண்டும் அமைக்கப்பட வேண்டும்.

உறுப்பினர்கள் நான்கு பேரும் சமூக சேவை, பொருளாதாரம், வணிகம், தொழில், சட்டம், கணக்கியல் போன்ற துறைகளில் போதுமான அறிவும் முன் அனுபவமும் இருக்க வேண்டும்.

ஆக இந்த மன்றத்தில் தலைவர் உட்பட ஐந்து உறுப்பினர்கள் இருப்பர். இந்த ஆணையத்தில் 100 இலட்சம் ரூபாய்க்கு அதிகமான நஷ்ட ஈடுக்கான வழக்குகள் மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் ஆணையின் மேலான முறையீடுகள் நடத்தப் பெறுகின்றன.

# வடசென்னை மாவட்டம் வியாசர்பாடி கிளை செய்திகள்











வியாசார்பாடி கிளை செய்திகள் !தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரமைப்பு மற்றும் அகில இந்திய மக்கள் உரிமைகள் பாதுகாப்பு கழகம் வியாசர்பாடி கிளை சார்பாக இன்று (14/02/2021) மாலை 03.00 மணியளவில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கிளைத் தலைவர் M.R.ஆனந்தன் தலைமை வகித்தார், இக்கூட்டத்தின் வாயிலாக வியாசர்பாடி கிளையின் வளர்ச்சி மற்றும் மேம்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது, தலைமையின் உத்தரவுகளை செயல்படுத்துதல், உறுப்பினர்களை பெறுமலவில் அமைப்பில் இணைத்தல் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது, கூட்டத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் தமிழ்நாடு நுகர்விழி மாத இதழ் கொடுக்கப்பட்டது.

# திருப்பூர் மாவட்ட செய்திகள்







திருப்பூர் மாநகரம். Tnk புறம் நடுநிலைப்பள்ளியில் 72 ஆவது குடியரசு தினம் விழா பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவரும். மற்றும் திருப்பூர் மாவட்ட நுகர்வோர் கூட்டமைப்பினருமான அமைப்பாளர் சிந்து சுப்பிரமணியம் கொடியேற்றி வைத்து தலைமை தாங்கி வைத்தனர். இதில் பள்ளி ஆசிரிய பெருமக்கள் மற்றும் நகரின் முக்கியஸ்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்!



16221. திருப்பூர் மாவட்டம் நுகர்வோர் நீதிமன்றத்தில் சில வருடங்களாக பணியில் இருந்து தற்போது இடம் மாறுதலாகி சென்னை மாநில நுகர்வோர் தலைமை நீதிமன்றத்தில் பணி தொடர இருக்கின்ற அலுவலக உதவியாளர் மனோகர் அவர்களுக்கு திருப்பூரில் பிரிவு உபச்சார விழா தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு பேரவையில் மாநில பொதுச் செயலாளரும் திருப்பூர் மாவட்ட தலைவருமான திரு சிந்து சுப்ரமணியம் ஏற்பாட்டில் பிரிவு உபச்சார விழா நடைபெற்றது திருப்பூர் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தர் திரு கார்த்திகேயன் அவர்களும் இரண்டாம் எழுத்தர் செல்வி இலக்கியா அவர்களும் தற்காலிக அலுவலக உதவியாளர் பாலமுருகன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## திருப்பூர் மாவட்டத்தில் வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரம் மாநில நுகர்வோர் ஆர்வலர் திரு. சிந்து ஆர். சுப்பிரமணியம் பங்கேற்றார்!








வருகின்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு கடந்த 9.3.2021 அன்று பல்லடம் பஸ் நிலையத்தில் தொடங்கி முக்கிய இடங்களில் பல்லடம் பகுதி தேர்தல் அதிகாரியும், திருப்பூர் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புத் துறை அதிகாரியுமான மாவட்ட வட்ட வழங்கல் அதிகாரி மற்றும் துணை ஆட்சியர் மேன்மை மிகு கணேஷ் அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சியர் உயர்திரு விஜயகார்த்திகேயன் அறிவுறுத்தலின்படி வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் பொது நல விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியில் திருப்பூர் மாவட்டம் நுகர்வோர் ஆர்வலர் சிந்து ஆர். சுப்பிரமணியம் பல்லடம் அரசு அதிகாரி திரு.மேகநாதன், பல்லடம் தாலுகா நுகர்வோர் அமைப்பின் அமைப்பாளர் சுப்பிரமணியம் சாஸ்தா மற்றும் பலர் கலந்துகொண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் 100 சதவிகிதம் மக்கள் வாக்களித்து ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டி 'எங்கள் ஓட்டு விற்பனைக்கு அல்ல' என்ற வாசகத்தை முன்னிறுத்தி நிகழ்ச்சி நடைபெற்றது.

# கேட்கப்படாத கேள்விகள்.......
# தேர்தல் ஆணையத்திற்கு !

**தேர்தல் நேரங்களில் வாக்காளராகிய எனக்கு, வேட்பாளர்கள் பற்றிய எந்த விவரத் தினையும் தேர்தல் ஆணையம் எனக்கு சட்டப்படியும் வழங்குவதில்லை, கட்டணம் செலுத்திக்கூட அவர்பற்றிய தகவல்களை தெரிந்துகொள்ள வழி ஏற்படுத்திக்கொடுக்கவில்லை..........**

ஆனால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளருக்கு மட்டும் தேர்தல் ஆணையம், வாக்காளராகிய என்னைப்பற்றிய தகவல் அதாவது எனது பெயர், தந்தை பெயர், முகவரி, வயது, புகைப்படம் உட்பட கட்டணமின்றி வழங்குவது சரியா?

சரி இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து பார்த்துக்கொள்ளுங்கள் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தினால், ஏழை மக்களால் இணையதள உலாவுதலுக்கு சென்று பார்க்கக்கூடிய சாத்தியம் உண்டா?

**சரி வேட்பாளர்கள் பற்றிய தகவல் என்றால் என்ன?**

பெயர், முகவரி, வயது, கல்வித்தகுதி, தொழில், வருமான வரி பற்றிய தகவல்கள், சொத்து விவரங்கள் பற்றிய தகவல்கள், குற்றப்பிண்ணனி குறித்த தகவல்கள், தனித்தொகுதியாக இருந்தால் சாதி சான்றிதழ் குறித்த தகவல்கள், வாக்காளர் அடையாள அட்டையின் விவரம் ஆகியவைகள்..

ஏன் உங்களுக்கு வேட்பாளர்கள் பற்றிய தகவல்களை இலவசமாகவோ அல்லது கட்டணம் செலுத்தியோ வழங்கவேண்டும்? என்ற எதிர்க்கேள்வி தேர்தல் ஆணையம் எழுப்பினால்.........

மக்கள் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றிபெறுகிற அந்த வேட்பாளர் சட்டமன்றத்திற்கு சென்று சம்பளம் வாங்காமல் வேலை செய்கிறாரா?

ஒரு சட்டமன்ற உறுப்பினர் மாதம் ரூ.30000 சம்பளம் மற்றும் இதரபடிகள்




அனைத்தும் சோத்து ரூ.1,05,000 வாங்கி மக்கள் பணியாற்றப்போகிறார்.

5 வருடத்தின் முடிவில் அவர் அரசாங்க ஓய்வூதியம் பெறுகிற தகுதியில் வந்துவிடுகிறார்.

ஆகையால்தான் ஒரு சட்டமன்ற உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்கு முன் அவர்பற்றிய தகவல்களை வாக்காளர்கள் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாகிறது.

தேர்தல் ஆணையம் குறைந்த கட்டணத்திலும், இலவசமாகவோ அல்லது இணைய தளத்திலோ வேட்பாளர்கள் பற்றிய தகவல்களை பதிவேற்றம் செய்து வாக்களர் களுக்கு வழங்குவதுதான் சரியான, முறையான ஜனநாயகம்.........

ஒருவேளை இப்படி செய்துபார்த்தால் என்ன?!!!

வேட்பாளர்கள் தேர்தல் அலுவலர் முன் தாக்கல் செய்கிற பிரமாண வாக்குமூலத்தில் சொத்துவிவரம், குற்றப்பிண்ணனி உள்ள தகவல்கள், வருமான வரி சம்பந்தப்பட்ட தகவல்கள், கல்வித்தகுதி ஆகிய பகுதிகளை மட்டும் நகலெடுத்து தேர்தல் பிரச்சாரத்தின் போது வாக்காளர்களிடம் கண்டிப்பாக வழங்க அறிவுறுத்தலாமே!!!

அதை வருகிற 2021 தமிழக சட்டமன்ற தேர்தலில் இந்திய தேர்தல் ஆணையம் நடைமுறைப்படுத்துமா?

**G.M. SHANKAR**
**ADVOCATE**



G.Arunagiri
Prop

அமைப்பின் உறுப்பினர்களுக்கு சலுகை விலையில் CC TV கேமரா பொருத்தப்படும்.

**SIGMAA TECH SOLUTIONS**

Sigmaa Creating Sustainable Ambience

**We Narrow Down BMS & IBMS**

- CCTV/Security Cameras
- Door Access Control
- Fire Alarm/Burglar Alarm Systems
- Fire Extinguisher/Fire Sprinkler
- Fire Hydrant
- Networking System
- PAS System / Solar System
- GPS Vehicle Traking System



# 107, Lake View Garden, Seeyathaman Koil Street,
Korattur (North), Chennai - 600 076.
**Mobile : 98410 50681 / 98412 71710**
Email: sigmatechsolutions.2007@gmail.com
Website:www.sigmaatechsolutions.com

PRAISE THE LORD

Cell : 8940056880
9786449190
7339060079

SCS

**SHALOM**

CATTERING SERVICES

All Type of Function Undertaken Here



Prop: **J.Ashok**

Life Member : TamilNadu Consumer Protection Organization and
All India People Rights Protection Organization
News Reporter : Tamil Nadu Nugarivizhi and Consumer Today

No. 6/B, Sivaraj St street, Old Pallavaram, Chennai-117

நாட்டில் நடக்கும் மரணங்களுக்கு முதல் 10 காரணங்களில் முக்கியமானது சாலை விபத்துக்கள். ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்துக்கள் எண்ணிக்கை 3.1 சதவீதம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அதற்கு ஒரு பிரேக் போட்டு, 2025க்குள் சாலை விபத்து எண்ணிக்கையை பாதியாக குறைக்க மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை திட்டமிட்டிருக்கிறது.



# ஓட்டுநர் உரிமம் பெறுவதில் புதிய அறிவிப்பு சரியா?

முறையாக வாகனம் ஓட்டத் தெரிந்த, சாலை விதிகளை பின்பற்றும் தன்மையுள்ள ஓட்டுனர்கள் போதிய அளவுக்கு இல்லாதது தான் விபத்துக்கான முக்கிய காரணமாக பட்டியலிடப்படுகிறது. அதனால், தரமான வாகன ஓட்டுனர்களை பெருக்க, சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் சமீபத்தில் ஒரு வரைவு அறிக்கையை பொதுமக்களின் கருத்துக் கேட்புக்காக அதன் இணையதளத்தில் வெளியிட்டிருக்கிறது.

அதில், அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையத்தில் பயிற்சி எடுத்தவர்கள், ஆர்டிஓ ஆபீசுக்கு வந்து வாகனம் ஓட்டிக் காட்ட வேண்டியதில்லை என்ற சலுகை இடம்பெற்றிருக்கிறது.

அதாவது, ஆர்டிஓ அலுவலகத்துக்கு சென்று நாள் கணக்கில் காத்திருந்து வாகனம் ஓட்டிக் காட்டி லைசென்ஸ் வாங்குவதற்கு நேரமின்மை காரணமாகவே பலர் ஓட்டுனர் லைசென்ஸ் வாங்குவதில்லை. அதை சரி செய்வதற்கு ஒரு வசதியாக, தரமான ஓட்டுனர் பயிற்சி மையத்தில் ஓட்டிப் பழகியிருந்தால் போதும், ஆர்டிஓ முன்பாக வாகனம் ஓட்டிக் காட்ட வேண்டாம் என்ற சலுகையை வழங்க அரசு முன்வந்திருக்கிறது.

இப்போதே நடைமுறையில் ஆர்டிஓ அலுவலகங்களில் ஓட்டுனர் பயிற்சி மையங்களின் ஆதிக்கமும், இடைத்தரகர்களின்



ஆதிக்கமும்தான் கொடிகட்டிப் பறக்கிறது. ஆன்லைனில், நேரடியாக படிவம் பூர்த்தி செய்து கொண்டுபோய், தனிநபராக ஒருவர் லைசென்ஸ் வாங்குவது என்பது அரிதினும் அரிதாகத்தான் இருக்கிறது.

ஓட்டுனர் பயிற்சி மையங்களும், தங்களிடம் வரும் வாடிக்கையாளர்களிடம், தேவையான கட்டணத்தை வாங்கிக் கொண்டு லைசென்ஸ் வாங்கிக் கொடுத்துவிடுகிறது. அவர்களுக்கு போதிய பயிற்சி கொடுக்கப்பட்டதா? சாலை விதிமுறைகள் கற்றுத் தரப்பட்டனவா என்பதெல்லாம் ஆர்டிஓ அலுவலகங்களில் முழுமையாக பரிசோதித்துப் பார்ப்பது கிடையாது.

ஆர்டிஓ என்ற ஒரு அதிகாரி, பரிசோதித்துப் பார்ப்பார் என்கிறபோதே, இவ்வளவு தில்லுமுல்லுகள் நடக்கும்போது அதற்கு வேலையே இல்லை என்றாகிவிட்டால், பயிற்சி மையங்கள் கைகாட்டுவோருக்கு லைசென்ஸ் கிடைக்கும் சூழல் உருவாகும். அது, வாகனம் ஓட்டத் தெரியாதவர்களுக்கும் லைசென்ஸ் கிடைக்க வழிசெய்யுமே தவிர, தரமான ஓட்டுனர்களை உருவாக்காது.

எனவே தேவைக்கு ஏற்ப ஆர்டிஓ அலுவலகங்களை அதிகரிக்கச் செய்து, வாடிக்கையாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய தேவை இல்லாதபடி ஆன்லைன் டோக்கன் வசதி உள்ளிட்ட புதிய சேவைகளை அறிமுகப்படுத்தி, காலதாமதமின்றி வேலையை முடித்து தர வேண்டுமே ஒழிய, புதிய சலுகை என்பது வீண் வேலை.



**M.R.ஆனந்தன்**
மாநில துணைச் செயலாளர் மற்றும்
செய்தி நிருபர் தமிழ்நாடு நுகர்விழி
- 98846 68673

# வழக்கறிஞர் இல்லாமல், நீங்களே பொது நல வழக்கு போடுவது எப்படி...?

**பொதுவாக இரண்டு இடங்களில் பொது நல வழக்கு போடலாம். ஒன்று, கீழ் நீதிமன்றம். இது, மாவட்ட நீதிமன்றம் ஆகும். இரண்டு, உயர் நீதிமன்றம். இப்போது, கீழ் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு போடுவது எப்படி என்று பார்க்கலாம்.**

பொதுவாக சார்பு நீதிமன்றத்திலேயே, பொது நல வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது. பத்து நபர்கள் இணைந்து வழக்கு போடுவது நல்லது. இதற்கு முதலில், லீவ் மனு போட வேண்டும். இது, வழக்குடன் இணைந்தது.

முதலில் சிவில் வழக்கு போட, பிராது தயாரிக்க வேண்டும். முதலில், நீதிமன்றத்தின் பெயர், அதன் கீழ், ஊர், அதன் கீழ், முதலேற்பு வழக்கு எண் என போட்டு, இடம் விட்டு, எந்த வருடம் தாக்கல் செய்கிறோமோ, அந்த வருடத்தை போட வேண்டும். அதன் பின்பு, பத்து பேர் வழக்கு போடுவதாக இருந்தால் அவர்கள் பெயரை, ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதுங்கள். அதற்கு நேராக, வாதிகள் என்று காண்பியுங்கள். அதன் பின்பு, எதிரிடை என்று போட்டு, எதிர் பார்ட்டி நபர்கள் பெயரை ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதுங்கள். அதற்கு நேராக, பிரதிவாதிகள் என்று காண்பியுங்கள்


இதன் பெயர், short cause title எனப்படும்.

சிவில் வழக்கில், பிராதை, ஆர்டர் 7, விதி 1 இன் கீழேயே தாக்கல் செய்ய முடியும். ஆகையால், இப்போது, வாதி தரப்பில் சமர்ப்பிக்கும், பிராது, ஆர்டர் 7, விதி 1 என்று, நடு மையத்தில் எழுதுங்கள். அதன் பின்பு, வாதிகளின் விலாசம் என்று, தலைப்பிட்டு, வாதி வசிக்கும் மாவட்டம், ஊர், தெரு, கதவு இலக்கம், மற்றும், ஹிந்து என்றால், ஹிந்து என்றும், அப்பா பெயர், வயது, அதன் பின்பு, வாதியின் பெயர் என எழுதுங்கள்.

பல பேர் இருந்தால், வரிசையாக ஒன்று, இரண்டு என எழுதுங்கள். அதன் பின்பு, வாதிக்கு summon, நோட்டீஸ் அனுப்ப மேலே சொன்ன முகவரி போதுமானது என்று எழுதுங்கள். அதன் பின்பு, பிரதிவாதிகளின் விலாசம் என்று தலைப்பிட்டு, மேலே சொன்னது போல, வாதிகளின் முகவரி போலவே, எழுதி கொள்ளுங்கள். அதன் கீழ், பிரதிவாதிகளுக்கு summon, நோட்டீஸ் அனுப்ப மேலே சொன்ன முகவரி போதுமானது என்று குறிப்பிடுங்கள். இதன் பெயர் லாங் cause டைட்டில் ஆகும். இப்போது, அடுத்த பாராவாக, நீதிமன்ற jurisdiction குறிக்க வேண்டும்.

நீங்கள் வழக்கு போடும் ஊர், தாவா நீதிமன்ற எல்லைக்குட்பட்டதால், இந்த வழக்கு இங்கு தாக்கல் செய்யபடுகிறது என்று எழுதுங்கள். ஒவ்வொன்றும் ஒரு பாரா ஆகும்

இப்போது மூன்று



பாரா முடிந்திர்க்கும்.

வழக்கு போடுபவர், வாதி என்று நினைவில் வைத்து கொள்ளுங்கள் வழக்கின் எதிராளி, பிரதிவாதி ஆவார்.

யார் மேல் பரிகாரம் கோருகிறீர்களோ, அவர்கள் அனைவரையும் பிரதிவாதியாக சேர்க்க வேண்டும், அடுத்த பாரா, வழக்கு விவரங்களை ஆரம்பியுங்கள்.

வாதியானவர், இந்த கிராமத்தில் வசித்து வருகிறார் இப்படி, வழக்கின் சாராம்சத்தை, சுருக்கமாக, பல பாராக்களாக பிரித்து எழுதுங்கள். உதாரணமாக, பொது பாதை, இவ் வளவு நாளாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இப்போது, இன்ன நபர், அதை ஆக்கிரமித் துள்ளார். இதனை தெரிவித்து, எதிர் மனுதாருக்கு, இந்த தேதியில் வாதியால் மனு, பதிவு தபாலில் அனுப்ப பட்டது. அதை பெற்று கொண்டு, இன்று வரை, பிரதிவாதிகள் நடவடிக்கை ஏதும் எடுக்காமல், காலம் கடத்தி வருகின்றனர்.

இவ்வாறாக, உங்கள் கரு பொருளை மையபடுத்தி, பிராது விவரங்களை சொல்லுங்கள். நீங்கள் அனுப்பிய மனுவின் நகலை தாக்கல் செய்தால், ஒன்றாம் பிரதிவாதிக்கு அனுப்பிய மனு, தபால் ரசீது ஆகியவை வாதி தரப்பு ஒன்றாவது சான்றாவணம் ஆகும் என்று குறிப்பிடுங்கள். சட்ட பாயிண்ட் களையும், குறிப்பிடுங்கள். அதன் பின்பு, அடுத்த பாராவாக, உங்கள் வழக்கின் வியாச்சிய மூலத்தை எழுதுங்கள்.

அதாவது, எந்த தேதியில் ஆக்கிரமிப்புதாரர் ஆக்கிரமித்தார், எப்போது பிரதிவாதிகளுக்கு மனு செய்யப்பட்டது, இன்று வரை பிரதிவாதிகள் வீண் காலம் கடத்தி வருகிறார்கள், மற்றும், வாதி இருக்கும் ஊர், பிரதிவாதி இருக்கும் ஊர், வழக்கு சொத்து இருக்கும் ஊர் ஆகியவற்றை சொல்லி, இதில் உற்பத்தி என்று காண்பியுங்கள். இது தனி பாரா.

அடுத்து, வாதி, நீதிமன்ற கட்டணமாக TAMILNADU COURT FEES AND SUITS VALUATION ACT பிரிவு, இன் படி, இவ்வளவு பணம் செலுத்துகிறார் என்று எழுதுங்கள். அதன் பின்பு, prayer. இதில், நீங்கள் என்ன பரிகாரம் கூறுகிறீர்கள், யார் மீது கூறுகிறீர்கள் என்று சொல்லுங்கள். உதாரணமாக, ஒன்றாம் பிரதிவாதி, பொது இடத்தை ஆக்கிரமித்திருந்தால், ஒன்றாம் பிரதிவாதியை, இரண்டு, மூன்று பிரதிவாதிகள் தாவா பொது இடத்தில் இருந்து அகற்ற, உத்தரவிடும் படிக்கும். அதன் பின்பு, வாதிக்கு, பிரதிவாதிகள் வழக்கிடை செலவை தரும்படிக்கும், மற்றும், நீதிமன்றம் கருதும் இன்ன பிற பரிகாரங்களை வழங்கும்படிக்கும், பிரார்திக்கபடுகிறது என்று முடியுங்கள்.

இதில், அரசு அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தொடுப்பதால், பிரிவு என்பது, சிவில் procedure code படி, வழக்கு தொடுப்பதற்கு தொண்ணூறு நாட்களுக்கு முன் அறிக்கை அனுப்ப வேண்டும். அவசரமாக, இந்த வழக்கை தாக்கல் செய்தால், exemption மனு, பிரிவு, 80(2), civil procedure code படி, தாக்கல் செய்ய வேண்டும்.

அந்த மனு, இந்த பிராதுடன் தாக்கல் செய்திருப்பதாக, பிராதில், சொல்லுங்கள். இப்போது, இடது பக்கம் வழக்கறிஞர் கையொப்பமும், வலது பக்கம் வாதிகள் கையொப்பமும் போட வேண்டும்.

அதன் பின்பு, பிராதை எப்படி மதிப்பிடுகிறீர்கள் என்று, particulars ஒப் valuation என்று தலைப்பிட்டு, சொத்து மார்க்கெட் மதிப்பு காட்டுங்கள். அதன் பின்பு,TAMILNADU COURT FEES AND SUITS VALUATION ACT பிரிவு, இன் படி, இவ்வளவு பணம் செலுத்துகிறார் என்று எழுதுங்கள்.

அதன் பின்பு, சரி பார்த்தல் என்று தலைப்பிட்டு, மேலே கண்ட சங்கதிகள் எல்லாம் என் அறிவிற்கு எட்டிய வரை உண்மை என சொல்லி, மதுரையில் வைத்து, தேதியில் கை எழுத்திட்டேன் என சொல்லுங்கள்.

அதன் பின்பு, சொத்து விவரம் எழுதுங்கள். கிரைய பத்திரத்தில் சொத்து விவரம் கொடுத்திருப்பார்களே, அந்த மாதிரி. அதன் பின்பு, மீண்டும், சரி பார்த்தல் என்று மேலே சொன்னவாறு, எழுதுங்கள்.

அதன் பின்பு, மேலே சொன்ன short



cause title எழுதி, வாதி தரப்பில் சமர்ப்பிக்கும் ஆவணங்கள், ஆர்டர் ஏழு, விதி பதினான்கின் படி என்று தலைப்பிட்டு, நான்கு column கட்டமிட்டு கொள்ளுங்கள் முதல் column இல், வரிசை என், அடுத்த column இல் ஆவன தேதி, அடுத்த column இல் ஆவன விவரம், அடுத்த column இல் ஆவன தன்மை, அது நகலா அல்லது அசலா என்று காண்பியுங்கள்.

இப்போது, உங்கள் கைவசம் உள்ளல ஆவனங்களை, வரிசையாக ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதுங்கள். அதன் கீழ், இடது பக்கம், ஊர், தேதியும், வலது பக்கம், வழக்கறிஞர் என்று காண்பியுங்கள். வழக்கறிஞர் இல்லாவிட்டால், வாதிகள் என்று காண்பித்து கொள்ளுங்கள். அசல் ஆவநங்கள் அனைத்தையும் தாக்கல் செய்யுங்கள். அது முடியாவிட்டால், சான்றிட்ட நகல் தாக்கல் செய்யலாம்.

அதுவும் இல்லாவிட்டால், நகலை தாக்கல் செய்யலாம். ஆனால், விசாரணை வரும்போது, அசல் அல்லது சான்றிட்ட நகலைத்தான் தாக்கல் செய்ய வேண்டும்.

அதை, பின்பு கொடுப்பதாக குறிப்பில் காண்பிக்கலாம். இந்த ஆவண பட்டியல் தனி தாளில் தயார் செய்து, பிராதுடன் இணைக்கலாம். இப்போது பிராது தயார். இதனுடன், நீங்கள் வழக்கறிஞர் வைத்தால், வக்காலத்து வைக்க வேண்டும். அதன் பின்பு, ஆவணங்களை, ஒரு தனி தாளில் டாக்கட் போட்டு, தைத்து, அசல ஆவணங்கள தவிர, மற்றவற்றிற்கு, ஐந்து ரூபாய் நீதிமன்ற வில்லை ஒட்டி கொடுங்கள்.

பிராதின், முதல் பக்கத்தில், valuation சீட் வைக்க வேண்டும். அதன் பின்பு, நீதிமன்ற ஸ்டாம்ப் பேப்பர், அதன் கீழ் பிராது வைத்து தைத்து கொள்ளுங்கள். உள்ளே, வக்காலத்து, ஆவணங்கள் ஆகியவற்றை வைக்க வேண்டும். சில நீதிமன்றத்தில், வாதி, பிரதிவாதி விலாசம் தனி தாளில் அடித்து வைக்க வேண்டி உள்ளது.

முன்பே சொன்னது போல, short cause title எழுF, STATEMENT U/O. VI, RULE 14-A என்று, தலைப்பிட்டு அதன் கீழ், வாதி, பிரதி வாதி விலாசங்கள் எழுத வேண்டும். அதன் பின்பு, supporting affidavit.

இதுவும், short cause title எழுF, SUPPORTING AFFIDAVIT FILED BY THE 1st PLAINTIFF ABOVENAMED U/O VI, R. 15(4) OF C.P.C. என்று தலைப்பிட்டு, அதன் கீழ், வாதியின் விலாசத்தை தலை கீழாக எழுதி, பிராதில் வாதியின் விலாசம் எழுதுவீர்களே, அது போல, ஆகிய நான், சத்திய பிரமாணத்தின் பேரில் எழுதி வைத்த அப்பிடவிட் என்று எழுதி கொள்ளுங்கள்.



அதன் பின்பு, நான் வழக்கின் வாதி ஆவேன், எனக்கு வழக்கு விவரங்கள் பூராவும் நன்கு தெரியும் என்று சொல்லி, அடுத்த பாராவில், சுருக்கமாக பிராதின் விவரத்தை சொல்லுங்கள்.

பல வாதிகள் இருந்தால், பிற வாதிகளுக்காக, இந்த அப்பிடவிட் தை தாக்கல் செய்வதாக கூறி கொள்ளுங்கள்.

இறுதியாக, தனி பாராவாக, ஆகவே, கணம் நீதிபதி அவர்கள் பிராதுபடி தீர்ப்பளிக்க வேண்டும் என்று முடியுங்கள். அதன் பின்பு, இடது பக்கம், மேலே சொன்ன சங்கதிகள் யாவும் உண்மை என சொல்லி, தேதியில், என் முன்பாக, ஊரில் வைத்து கை எழுத்திட்டார் என எழுதுங்கள்.

வலது பக்கம், வாதியின் கையொப்பம் இடுங்கள். அதன் நடுவில், ஒரு வழக்கறிஞரின் attestation வாங்கி கொள்ளுங்கள். இப்போது supporting அப்பிடவிட் ரெடி. பிராதின் ஒவ்வொரு பக்கத்திலும், supporting affidavit ஒவ்வொரு பக்கத்திலும், வாதி கையெழுத்து வாங்க வேண்டும்.

அடுத்து, அரசு ஊழியர்கள் மேல் வழக்கு தொடுக்கும் முன், உரிய அறிவிப்பு அனுப்பாவிட்டால், அதற்கும் ஒரு அப்பிடவிட், மனு தாக்கல் செய்ய வேண்டும். வழக்கம் போல, short cause டைட்டில் எழுதுங்கள்.

இது தனி இடை நிலை மனு ஆகும். எனவே, லேசாக மாற்றி, நீதிமன்ற பெயர், ஊர் எழுதி, அதன் கீழ், இடைநிலை மனு எண் என எழுதி, இடம் விட்டு, பார் போட்டு, 2014 என வருடத்தை போட்டு கொள்ளுங்கள். இதில், வாதிகள் மனுதாரர்கள் ஆவார்கள். எனவே, வாதிகள் பெயரை எழுதி, மனுதார்கள் / வாதிகள் என்று காண்பித்து கொள்ளுங்கள். அதே போல, கீழே, எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகள் என்று, அரசு அலுவலர்களை மட்டும் சேர்க்க வேண்டும்.

உதாரணமாக, நீங்கள் பொது நல

வழக்கு போடும்போது, முதல் பார்ட்டி ஆக, ஆக்கிரமிப்புதாரரை காண்பித்து இருந்தால், இரண்டாம் பார்ட்டி ஆக, அரசு அதிகாரிகளை காண்பித்து இருப்பீர்கள்.

இங்கு, அரசு அலுவலர்கள் மட்டும் வருவதால், அவர்களை, இம்மனுவில், எதிர்மனுதார்களாக காண்பிக்கும்போது, வரிசையாக காண்பித்து, அவர்கள் முக்கிய வழக்கில் எந்த cadre ஒ, அந்த cadre காண்பியுங்கள். உதாரணமாக, மாவட்ட ஆட்சியர், முக்கிய வழக்கில் இரண்டாம் பிரதிவாதி என்றால், இங்கு, முதல் எதிர்மனுதாராக காண்பித்து இருந்தால், முதல் எதிர்மனுதார் / இரண்டாம் பிரதிவாதி என்று காண்பியுங்கள். இப்போது, அப்பிடவிட் க்கு வருவோம். முதல் மனுதார் / முதல் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யும் அப்பிடவிட் என்று தலைப்பிட்டு கொள்ளுங்கள்.

அல்லது, எந்த மனுதார் வேண்டுமானாலும் அப்பிடவிட் தாக்கல் செய்யலாம். வழக்கம் போல, sworn செய்து கொள்ளுங்கள். அதாவது, விலாசத்தை தலை கீழாக எழுதி, ஆகிய நான் சமர்ப்பிக்கும் அப்பிடவிட் என்று காண்பியுங்கள்.

அடுத்து. முதல் பாரா, supporting அப்பிடவிட் இல் சொன்னது போல எழுதி கொள்ளுங்கள். அதன் பின்பு, ஒவ்வொரு சிறு பாராவாக, வழக்கு இந்த அரசு அதிகாரிகள் மீது உடனே தாக்கல் செய்ய வேண்டி உள்ளதால், அவர்களுக்கு அனுப்ப வேண்டிய அறிவிப்பை, அனுப்ப முடியவில்லை என்று பொருத்தமான காரணத்தை காண்பியுங்கள். இறுதியாக, தனி பாராவில், இம்மனுவை அனுமதிக்காது போனால், எனக்கு பெருத்த இழப்பு ஏற்படும். ஆனால், எதிர்மனுதாருக்கு எவ்வித ஆட்சேபனையும் இம்மனு தாக்கல் செய்ய இருக்க போவதில்லை என்று எழுதி கொள்ளுங்கள். prayer, ஆகவே, கணம் நீதிபதி அவர்கள் கிருபை செய்து, எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகளுக்கு அனுப்ப வேண்டிய பிரிவு 80(2) cpc அறிவிப்பை, dispense செய்ய வேணுமாய் பிரார்த்திக்கபடுகிறது என்று முடியுங்கள். இங்கும், supporting அப்பிடவிட் இல் இருப்பது போல முடித்து கொள்ளுங்கள்.

அப்பிடவிட் ரெடி. இப்போது மனு. இத்துடன் இணைத்துள்ள அப்பிடவிட் short cause title அதே போல எழுதி கொள்ளுங்கள். மனுதார் / வாதி தரப்பு மனு பிரிவு 80(2) c.p.c. படி என்று எழுதி கொள்ளுங்கள்.

இத்துடன் இணைத்துள்ள அப்பிடவிட்டில் கண்டுள்ள காரநன்களால், கணம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து, எதிர்மனுதார்கள் / பிரதிவாதிகளுக்கு அனுப்ப வேண்டிய பிரிவு 80(2) cpc அறிவிப்பை, dispense செய்ய வேணுமாய் பிரார்த்திக்கபடுகிறது என்று முடியுங்கள்.

அதாவது, அப்பிடவிட் prayer உம, மனு prayer உம, ஒன்றாக இருக்க வேண்டும். நீங்கள் இந்த வழக்கை உடனடியாக தாக்கல் செய்ய, அரசு ஊழியர்களுக்கு உரிய அறிவிப்பை கொடுக்க exemption செய்ய முறையான காரணங்களை சொல்லாவிட்டால், நீதிமன்றம் உங்கள் வழக்கை உடனடியாக கோப்பிற்கு எடுக்காது.

நோட்டீஸ் அனுப்பி விட்டு, மூன்று மாதம் கழித்து தாக்கல் செய்ய சொல்லுவார்கள். அடுத்து, லீவ் மனு. அதாவது, நீங்கள் பொது நல மனு தாக்கல் செய்ய, நீதிமன்றந்தில் லீவ் வாங்க வேண்டும். இது ஒரு விதமான், அனுமதி ஆகும்.

இதுவும், இடை நிலை மனுதான். இதற்கும் அப்பிடவிட், மனு வைக்க வேண்டும். அப்பிடவிட், ஒருமையில் இருக்க வேண்டும். அதாவது, நான், கேட்கிறேன் என்று வர வேண்டும். ஆனால், பிராதோ, வாதி, வாதி கோருகிறார் என்று அந்த நடையில் வர வேண்டும். ஒரு பொதுவான நலத்திற்கு எல்லா நபர்களுக்கும் ஒரே நபரே வழக்கு நடத்த, நீதிமன்றம் அனுமதி கொடுக்க வேண்டும்.

அதற்குதான், இந்த மனு. வழக்கம் போல, அப்பிடவிட், இதில் நீங்கள் ஏன் ஒரு நபரே இந்த வழக்கை நடத்த வேண்டும் என்று காரணம் கூற வேண்டும. அதே போல மனுவை, ஆர்டர் 1, விதி 8 இன் படி தாக்கல் செய்ய வேண்டும். prayer, ஆகவே, கணம் நீதிபதி அவர்கள், இவ்வழக்கில் ஒன்றாம் வாதியே, பிற வாதிகளுக்காக, இந்த வழக்கை நடத்த, உத்தரவிட வேண்டியது, அவசியமாயும், நியாயமான்யும் உள்ளது என முடியுங்கள்.

ஒவ்வொரு இடை நிலை மனுவில் இரண்டு



ரூபாய் நீதிமன்ற வில்லை ஒட்டுங்கள். இதன் கீழே, படி மெமோ, அதாவது, பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் வைக்க வேண்டும்.

பிராது copy, நோட்டீஸ், படி மெமோ, போஸ்டல் கவர் மற்றும், அஞ்சல் ஒப்புதல் அட்டை ஆகியவற்றை வைக்க வேண்டும். ஒரு எதிர்பார்ட்டிக்கு உள்ளூர் என்றால் ஐந்து ரூபாய் மற்றும் போஸ்டல் ஸ்டாம்ப் முப்பத்தைந்து ருபாய் ஒட்டுங்கள்.

பிரதிவாதி குடி இருப்பது வேறு நீதிமன்றம் மூலம் போகும் என்றால், கூடுதலாக பத்து ரூபாய், ஒரு நபருக்கு ஒட்டுவது நல்லது, நீதிமன்ற வில்லை. பிராதுக்கு ஒரு டாக்கட் வாங்கி வைத்து, கூடுதலாக நான்கு பச்சை காகிதங்கள் பிராதின் அடியில் வைத்து, பிராது டாக்கட், அதன் மேல் நான்கு கூடுதல் ஷீட்ஸ், அதன் மேல் பிராது, அதன் மேல் கோர்ட் பீஸ், அதன் மேல் valuation சீட் வைத்து தைத்து கொள்ளுங்கள்.

இப்போது, எல்லாம் தயார். இனி, இந்த வழக்கை இன்றே, நீதிமன்றம் கோப்பிற்கு எடுக்க வேண்டுமானால், emergent மனு மற்றும் அப்பிடவிட் வைக்க வேண்டும். இரண்டு ரூபாய் ஸ்டாம்ப் மனுவில் ஒட்டுங்கள். இதை மேலே வைத்து, காலை பத்து முப்பதுக்கு நீதிபதியிடம் சமர்ப்பியுங்கள்.

இதில், வழக்கு முடியும்வரை, உருத்து கட்டளை வேண்டும் என்றால், அதற்கு தனி அப்பிடவிட், மனு. மனு ஆர்டர் 39, விதி 1 இன் படி. அப்பிடவிட், வழக்கம் போலதான். அதில் கூடுதலாக, இம்மனுவை அனுமதிக்காது போனால், எனக்கு இழப்பு ஏற்படும்.

எனக்கு prima facie case and balance of convenience உள்ளது என சேர்த்து கொள்ளுங்கள். prayer, ஆகவே, கணம் நீதிபதி அவர்கள், எதிர்மனுதார் / பிரதிவாதி, வழக்கு முடியும்வரை, தாவா சொத்தை பயன்படுத்தக்கூடாது என இடைக்கால உருத்து கட்டளை வழங்கும்படிக்கும்,அதன் தொடர்ச்சியாக, இன்று, ஒரு exparte ad-interim injunction இம்மனு முடியும்வரை தரும்படிக்கும், பிரார்த்திக்கபடுகிறது.

இதில் ஒவ்வொரு இடை நிலை மனுவுக்கும், படி மெமோ வைக்க வேண்டும், dispense வித் மனுவுக்கு மட்டும் தேவை இல்லை. படி, பிராதில் சொன்ன படிதான். ஒரு நபருக்கு ஐந்து ரூபாய். முடிந்தால், ஒரு வழக்கறிஞரிடம் ரெடி செய்து வாங்கி கொள்ளுங்கள், அல்லது நீங்கள் தயார் செய்து, ஒரு வழக்கறிஞரிடம் காண்பித்து கொள்ளுங்கள். அதன் பின்பு, file செய்வது நல்லது. இது ஒரு மாதிரியே. இதில் நீங்கள் வழக்கை நன்றாக சட்டப்படி எழுதினால்தான், வழக்கு வெற்றி பெற வாய்ப்பு உண்டு. ஒரே நாளில் நம்பர் ஆகி விடும், சரியாக இருந்தால், இடைக்கால உறுத்து கட்டளையும், அன்றே கிடைக்க வாய்ப்பு உண்டு.

அசல் ஆவணங்களை வைத்தால், அன்றே கிடைக்க வாய்ப்பு உண்டு. ஒவ்வொரு அப்பிடவிட், மனு ஆகியவற்றுக்கும் டாக்கட் போட்டு கொள்ளுங்கள்.


Published by : C. Paul Barnabas. on behalf of Tamilnadu Consumer Protection Organisation, Chennai.
From its Office at No.2, Thirumuruga Nagar, Kolathur,Chennai - 600 099.
Printed by : Mr. H. Dhanasekaran at Sekar Offset Printers
No.168, Big Street, Triplicane, Chennai - 600 005.
Editor : Dr. N. Kanniah,*Phd*

**Head office : No.359 G, Konnur High Road (Pill Kington Road Junction) Ayanavaram, Chennai - 600 023. Tamilnadu, India.(Near Sayani Bus Stop & Sangeetha Mobiles )**
**Phone : 044 - 4332 4844, Cell : 99419 44999 / 94449 09993**
**E-mail : presitncpo@gmail.com, Website : www.tncpo.com, Facebook : TNCPO Chennai**



**T.S.K. கில்கிரிஸ்ட்**
தேசிய ஒருங்கிணைப்பாளர்
87544 44358



**AY.பொன்வேல்**
சென்னை மாவட்ட துணை செயலாளர்
98400 39439



**A.விஜயகுமார்**
மாநில உதவிச் செயலாளர்
80720 31115



**P. திருமாறன்**
வடசென்னை மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்
95001 44554



**M.ரமேஷ்குமார்**
மாநில இளைஞரணிச் செயலாளர்
98410 98983



**S.யோகேஷ்வரி நாயுடு**
மடிப்பாக்கம் கிளை பொருளாளர்
98331 26863



**S.சுபாஷினி**
செயலாளர், திருவல்லிக்கேணி பகுதி
99412 49377



**R.தேவி**
ரெட்ஹில்ஸ் கிளைத் தலைவர்
81246 50257



**S.ராஜேந்திரன்**
கே.கே.நகர் பகுதி நிர்வாகி
91762 93525




**V.M.கனிசெல்வம்**
மடிப்பாக்கம் கிளைச் செயலாளர்
98408 27182



**B. நிதிஷ்குமார்**
மடிப்பாக்கம் கிளை இ.செயலாளர்
88255 53646



**H. அப்துல்லா செரீஃப்**
மடிப்பாக்கம் கிளை து.செயலாளர்
98846 76417



**M.செல்வக்குமார்**
சேப்பாக்கம் கிளைச் செயலாளர்
63698 13901



**A. ராமதாஸ்**
மாநில பொதுக்குழு உறுப்பினர்
99419 87794



**K.சீனிவாசன்**
வியாசர்பாடி கிளை பொருளாளர்
98407 04377



**S. கோபாலகிருஷ்ணன்**
திருவல்லிக்கேணி கிளை நிர்வாகி
72003 10906

## பேரமைப்பின் மாநில, மாவட்ட நிர்வாகிகள்

ADVT

TAMILNADU NUGARVIZHI (Tamil Monthly) Registered News Paper - R.N.I. No: TN/T AM/2007/23434, Postal Registration No: TN/TBM/118

# தேர்தல் நாள்

**06 ஏப்ரல் 2021**

இந்த
**மை**
நமது தேசத்தின்
வலிமை



வாக்களிப்பது
ஒவ்வொருரின்
கடமை

**100%**
ஓட்டு

**தமிழர்களின் பெருமை**

**www.tncpo.com**

**Tamilnadu Consumer Protection Organisation, Chennai**